உ

# கயிலாசநாதர் சதகம்



அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பித்தது.

1933

உ

கடவுள் துணை

சேலம் சிதம்பரம்பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்ட

# கயிலாசநாதர் சதகம்



அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தது.

1933

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

உ

கடவுள் துணை

# கயிலாசநாதர் சதகம்

## காப்பு

சீரார் கயிலாச தேவன்மிசை யான்சதகம்
பாராரும் பைந்தமிழாற் பாடவே-ஏராரு
மிந்துநதிச் செஞ்சலடித் தென்னைதரு மைந்துகரக்
கந்தமதத் தந்திமுகன் காப்பு.

## கடவுள் வாழ்த்து

சீர்மேவு திங்களணி தேவனே வண்மைபெறு
தில்லைவளர் நடராஜனே
செங்கண்மா லயனுநின் னடிமுடிகள் காணும
றேடிய மகாதேவனே
தார்மேவு பொங்கர வணிந்தசிவ சம்புவே
சங்கரா கங்காதரா
தயாபர விநோதமெய்ஞ் ஞானச் சொரூபனே
சண்முகனை யீன்றகோவே
ஏர்மேவு முப்பத்து முக்கோடி தேவர்க
ளிறைஞ்சிடு மலர்ப்பாதனே
யெழின்மிகு கரத்தினின் மான்மழு தரித்தவோ
ரெந்தையே யெனையாளுவாய்
கார்மேவு சோலையொடு கங்கைமா நதிசூழ்ந்த
கற்பகவி ராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 1

## செய்யுள் வகை

நால்வகைச் சாதியும் பலவகையி னீதியொடு
நாற்கவிகள் சொலு முறைமையு
நவில்பரம லோபிகன் னடக்கைபண் டிதர்முறை
நாலெட்டி ராகவிதமுஞ் [மை
சால்புயர் புராணமொடு வேந்தர்களி யாண்டநா
டத்துவ மனைத்தி னியல்புஞ்
சகலகற் கணிதசாத் திரமட்ட வர்க்கமுந்
தருசகுன லட்சணமுட
னூல்களிற் சரசாஸ்திர மேன்மைபெறு கொக்
நூலினொடு கர்ப்போட்டமு [கோக
நன்மையாங் கந்தகத் தியல்புசா முத்திரிக
நான்மர பெலாமி தனிலே
காலமுத லியாவரு மறிந்திட வுரைத்தனன்
கற்பகவி ராசமேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 2

## வேதியர் சிறப்பு

ஆகம புராணகலை சாத்திரத் துண்மையுண
ரதிமந்திர பலமகிமையும்
ஆகமம் புரிசெயலொ டியமகிய மங்களு
மநுட்டான விதிமு றைமையும்
யோகநெறி வழுவாது காலநீ ராடலு
முவந்திடலு மெய்திய வோமத்
துள்ளமகிழ் சீலமுங் காயத்திரி நிலைமையு
முயர்வேத மோது சீரும்
பாகமிகு மவுபாச னர்ச்சியபாத் தியமுமெய்ப்
பயனுதவு கிரியை யாவும்
பனிரண்டு மாதமுந் தவறுது புரிவசிப் பண்புமறை
யோர் பெருமை காண்

காகனக வாழ்வுதரு மாமலைகள் சூழுமுயர்
கற்பகவி ராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 3

அரசர் சிறப்பு

நீதிநெறி வழுவாது செங்கோ னடாத்துவது
நிலைமையது கோடா மலே
நிறைகுடியி லபிமான மொடுமந்திரி யோசனையு
நீள்சத்திய மிகுதானமுஞ்
சாதிமுறை யவரவர்க் கேற்றமரி யாதையுஞ்
சதுர்வித வுபாயங்களுஞ்
சர்வவுயி ரியாவையுந் தன்னுயி ரென்றெண்ணலுஞ்
சதுரங்க சேனைபலமும்
வாதிபிரதி வாதிகள் வழக்கினடு நிலைமையது
மாறாது முடிவுசொல்லு
மாதளக் கர்த்தர்பிர தானிதா ளைபதிகள்
மகிமையும் வெற்றி வளமுங்
காதல்சே ரிவைவெலா மரசர்கட் குரியவாங்
கற்பகவி ராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 4

வைசியர் சிறப்பு

வந்தமுத லிற்செல விடார்கணூற் றுக்கொன்று
வட்டியைக் கொள்வர் மிக்க
வண்டப் புரட்டர்முறி தந்துதங் கட்கடகு
வைக்கினுங் கடனளிக்கார்
தந்திடும் பற்றுவர விற்பிசகி டார்சொன்ன
தவணைசற் றெனினும் வழுவார்
தங்காண யக்காரர் கேட்டனுப் பிக்கினுந்
தாமதித் தேகொ டுப்பார்.

பந்துஜன மெனினுகா ணயமிலா தவரேற்
பணத்தினுறு தாகங் கொடார்
பாவாண ரைக்காணி னுபசரித் தேகல்ல
பரிசளித் துள மகிழுவார்
கந்தமணி வணிகர்முறை யிந்தவகை யென்பர்கா [ண்
கற்பகவி ராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 5

### வேளாளர் சிறப்பு

ஆட்சிதரு நீதியுங் கொற்றவர்கள் புஜபலமு
மதிவீரர் சூரர் வலியு
மாயிரவர் வாணிப மியற்றுதலு முலகெலா
மன்னதா தாவென் பதும்
தாட்சியொன் றில்லாத வந்தணர் மகத்வமுந்
தங்குசப கல்யாணமுஞ்
சந்ததஞ் செபதபம் பூஜைநே மங்களிவை
தப்பாம லேபுரிவ தும்
மோட்சகிலே தருமருட் குருவினுப தேசமும்
முனிவரிரு டியர் சீலமும்
மூவுலக மும்புகழ வாழ்வுபெறு தலுமிவைகள்
முற்றுமே ழியர்பெருமை காண்
காட்சிதருங் கர்த்தனே சூட்சகா ருண்யனே
கற்பகவி ராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 6

### கவிஞர் பெருமை

அவிகொளு மிலக்கிய விலக்கணக் கடன்மடுத்
தாகமது ரஞ்சித் திர
மாகும்வித் தாரநாற் கவிமழை பொழிந்தெவரு
மரிதரி தெனச் சொல்லவே

துணிகொளும் பிரபந்த மதனுட் கலம்பகஞ்
சொற்சந்த மாலை வண்ணந்
துகளிலா மடல்கோவை பரணிபிள் ளைக்கவிதை
தொகைநிலைச் செய்யுண் முதலாய்
திணிகொளுயர் நூலெலா மரைநொடியிலே சொ
திறனுநன் மதுர வாக்குஞ் [லுந்
செப்புமவை யோர்கள்பிர மிக்கவிடி யென்னவே
செய்யுபிர சங்க நடையுங்
கணிகொளிவை யாவுமுடை யோன்கவிஞனுமெங்
கற்பகவி ராச மேவுங் [கள்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 7

உலுத்த ரியல்பு

தெள்ளுதமிழ் வாணரைக் கண்டுட னடுங்கித்
திடுக்கிட் டுளம் பதைத்துத்
திகைத்துமுகம் வேறாகி வாயடைத் துக்கண்
சிவந்துபெரு மூச்செ றிந்து
மெள்ளவே யோடிப் பதுங்கிப் பணப்பெட்டி
மீதிற் கவிழ்ந்து காக்கும்
வீண்லோப ரைச்செத்த சவமெனவு மாகாது
வீறுகல் லெனலொவாது
வள்ளமா மென்றிடினு மமையாது கழுதைபின்
வருக்கவுங் கூடாதுபுன்
வயிரவ னெனச்சொலவு மாகாது பதரென
வழுத்திடவு மெண்ணுது காண்
கள்ளமன முள்ளமா லோபிக்கு லோபியிணை
கற்பகவி ராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 8

## பிறவிக்குணம்

விரும்பனத் தோடுபிடி யானைகன் னடைகற்க
　　மேதினியில் யார்முயன்றார்
விழுகடன் மீனுக்கு மாமைக்கு நீந்தல்செய
　　மேனுள் பழக்கினவ ரார்
கரும்பினுக் கிரசமும் பாம்புக்கு விடமுமக்
　　கார்தான் புகட்டி னூர்கள்
கானமல ருக்குமண முமுள்ளின் முனையுமிக்
　　காசினியி லெவராக்கினூர்
பருப்புழியி னெடுபூனை பறவையா ளிகளெலாம்
　　பாயப் பழக்கினவரார்
பாரவனை யுறைகமுகி னுக்கிளைக ளிங்கென்று
　　பார்த்தெவர்கள் சொல்லி வைத்தார் [ண்
கரும்புவிசி லிவையெலாம் பிறவிக் குணங்கள்கா
　　கற்பகவி ராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
　　கயிலையங் கிரிவா சனே. 9

## செல்வத்தால் வருமுயர்வு

புல்லர்க டமக்குமிகு செல்வபாக் கியம்வரிற்
　　பொதிமூத்தன் முத்தப்பனும்
புகழ்முத்து முத்தயா முதலியா ராம்பின்
　　புகன்றிடுவ ரவர்க ளெனவே
செல்வர்க்கு மிக்கதாய்க் கிளைக்கு சென்றிடுஞ்
　　செந்தமிழ்ப் புலவோ ரெலாந்
தியாகியா ராசனேயென்று கொண் டாடுவர்க
　　டிட்டியுந் தெரியாது போம்
கல்லசெவி கேளாது வாயடைத் திடுமிக்க
　　கண்பினை யெதிர் காணினு
கட்டதலை யேறிடா மாட்டிக்கு லாவர்கடை
　　காயினுங் கடைய ரந்தக்

கல்லாத மூடரைக் காத்தவித மறிகிலேன்
    கற்பகவி ராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
    கயிலையங் கிரிவா சனே. 10

## அரிதெனல்

ஊமைசெவி டொடுபேடு குருடுகூ னின்றியே
    ருலகில் செனித்த லரிதா
மோருறுப் புங்குறைக ளின்றியுயர் குலமதி
    லுதித்தது தனிலு மரிதாம்
வாய்மைமிகு கல்விமா னுவதரி தாஞ்செல்வ
    வானுவ ததினு மரிதாம்
வணக்கமு மொழுக்கமும் வாய்ப்பதரி தாந்தர்ம
    வானுவ ததினு மரிதாம்
ஆமிதினு மத்துவித நெறியுணர்ந் தாசா.
    னநுக்கிரகம் பெறுவ தரிதா
மட்டாங்க யோகமெய்ஞ் ஞானமு நிறைந்திடுத
    லதினுமரி தரிது கண்டாய்
காமிசிவ காமியபி ராமிமதி சாமியே
    கற்பகவி ராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
    கயிலையங் கிரிவா சனே. 11

## இறந்து மிருக்கின்றவர்

தேவால யங்கோ புரங்கல்வி பயிலிடந்
    தேர்முதல் வுண்டாக்கி னோர்
செகமெலாங்கீர்த்திபெறு மோயாத கொடையு
    தேசத்தி னீதி மன்னர் [ளோர்
காவியஞ் செய்கவிஞர் சுத்தரண வீரரொடு
    கனவித்தை கற்ற பெரியோர்
கதிர்மதியு முள்ளளவு மாறாத வறனெலாம்
    காதல்கொடு செய்த பேர்கள்

வாவிகூ பஞ்சோலை தருமசத் திரமடம்
    வண்மை பெறவேசெய்த பேர்
வானகத் தீபிரகள் றேனினும் புவியதனின்
    மாளாத பேர்க ளிவர்காண்
காவுடைய கோவுமுயர் மாவுடைய தேவமதி
    கற்பகவி ராச மேவும்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
    கயிலையங் கிரிவா சனே. 12

இருந்து மிறந்தவர்

வெகுசன விரோதியர்கள் பழிமிகக் கொண்டபேர்
    விதரணர்க் கீயாதபேர்
வேட்டகந் தன்னிலே மருவுண் டிருந்தபேர்
    வெருகுடன் பட்ட பேர்கள்
செகமதனி லேவழக் கோரமது சொல்லுவோர்
    செப்புமொழி தப்புநடையோர்
தினந்தினம் பொய்யுரை புகன்றுபா வலர்தமைத்
    திருப்படிக்கின்ற தீயோர்
மகதமுத லைம்பாவை யாவையுங் கற்றவையில்
    வாய்மூடி நிற்கின்ற பேர்
மாறுத லறுமையோர் தீராத பிணியாளர்
    மனைவியை வழங்கி யுண்போர்
ககமென வலைந்துதிரி யிதுமாண்ட பிணமென்பர்
    கற்பகவி ராச மேவும்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
    கயிலையங் கிரிவா சனே. 13

செல்வச் சிறப்பு

பொருளுள்ள பேர்களுக் கருளுண்டு புகழுண்டு
    புண்யமா மிக்க வுண்டு
பூதலந் தவரெலாங் கண்டவுட னேதொழுது
    பூபதி குபேர னென்பார்

திருகொன் றிலாதமதி யுண்டுதிற னுண்டுமெய்த்
தேசிகர்த மருளு முண்டு
தீங்கியற் றினுநன்மை யென்பார்கள் பெருமையுந்
தீரமொடு வீரமுண்டாங்
கருளுண்டு பந்துஜன வுறவுண்டு நண்பிணர்க
ளானோர்க ளுண்டு நிதமு
மவர்முகந் தன்னிலழ குண்டுகளை யுண்டுநல்
லானந்த பூர்த்தி யுண்டு
கருணைசெய் தன்பர்கட் கழியாத நிதியுதவு
கற்பகவி ராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 14

## வறுமைக் குணம்

படியதனி லேநூல்கள் பலகற் றுணர்ந்துநற்
பண்பினா லுயர்வு பெறினும்
பரிபவந் தருகின்ற வறுமைகுடி கொண்டிடிற்
பித்தரென வேமெலிகுவார்
மடிமைவிட் டொழியாது துயின்மிக விரும்புவார்
வாய்ச்சொலெங் குஞ்செலாது.
மங்கல மிழிந்தமா தருமவ மதிப்பர்பிறர்
மனையினிற் செலவஞ்சுவார்
கொடியோ ரெனப்பெயர் தரிப்பர்மித மின்றி
யூண்கொள்வ ரெவரும்ப கைசெய்வார்
கூரறிவு குன்றுமோர் காசுக்கு நம்பாத
கொள்கைவறு மைக்குணங் காண் [செய்
கடிகம ழிதழ்க்கொன்றை முடியிடை யணிந்தருள்
கற்பகவி ராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 15

### கோபக் கொடுமை

குற்றங்கண் டுவகைய துண்டுபெரு கோபமே
  கொடிதுதன் செய்கை கூறில்
குடிகெடுக் கும்பாப மதுவிளைத் திடுநல்ல
  குணமழிக் குந்தன் முன்னே
யுற்றபொரு ளினையறிய வொட்டாது பலராலு
  முறுகண்ட னைத்தந்திடு
மோங்குகனை மொடுசிறப் பியாவையு மழித்துமெய்
  யுறவோர்க டமையொழிக்கும்
மற்றவர்சொல் புத்தியுஞ் செவிதனக் கேறாது
  மடமையில் மூழ்குவிக்கும்
மாறாத துன்பமும் பயக்குமிதை மாற்றிநின்
  மலரடி தொழச்செய்கு வாய்
கற்றவ ரகத்துறை வுற்றபரி சுத்தனே
  கற்பகவி நாச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
  கயிலையங் கிரிவா சனே. 16

### கல்விச் சிறப்பு

கடலுலகி னுற்றபொரு ளுக்குளே நன்மைதரு
  கல்விநிலை பெற்ற பொருளாங்
கனலினு லுருகாது புனலினுங் கரையாது
  கள்ளரார் திருடொ ணாது
இடமான ராசாதி ராசராலு மணைந்து
  தீண்டிச் சிதைக்கொணாது
சடன்மக்க மாதரார் சேதமா காதொருவர்
  செலவிடற் குறைவுறாதன்
கடமிகு சகோதரர்க் கிடமது கொடாததனை
  வளவிடவு முடியாததா
லப்பொரு ளினைப்பெறு திப்புவியி லென்னென்ற
  வற்பருக ளபமென் சொலோ

கடகய முரித்துடலி னிற்றரித் திடுதேவ
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 17

பொருளாசைக் களவிலையெனல்

கடலிடத் தாழமு மதனினுண் மணலையுங்
கனம்பொழி மழைத்தா ரையுங்
காயத்தி னிலைமையும் யோகியர்கண் மகிமையுங்
கருதுகல் விச்செல் லையு
மடவார்க ளினைவையுங் கவியினுட் பொருளினொ
மாறுத நினதருளை யும் [டு
மகமேரு வளவையுஞ் சிரந்தினு ரோமமும்
வானத்தி னுறுமீன் களும்
புடவிநதி சலமுமா லோபியர்க ளுளமுமோர்
போதளவு செய்தா லுமே
பொருண்மீது வாசைதனை யளவிடக் கூடாது
பூதலமெ லாந் துதிக்குங்
கடவுளே யரிபிரமர் காணொணு வண்ணலே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 18

இவர்க்கிது துரும்பெனல்

கனயோக மார்க்கத்தி னின்றதுற விக்குநற்
காவலர்க ளோர் துரும்பு
கசடறக் கற்றுணர் வுடையோர்க்கு முத்தமிழ்க்
கடலெலா மோர் துரும்பு
தினமுங் கொடுக்கின்ற கொடையாள ருக்கதிக
திரவியமு மோர் துரும்பு
திவ்யசுந் தரமுள ரம்பையா கினுமவ
டெளிந்தவர்க் கோர் துரும்பு

மனமிக வருந்தியே பசியிலார்க் குக்கறும்
பதனுமோர் சிறு துரும்பா
மதிகரண வீரருக் குயிரொரு துரும்புபா
வலர்க்குமதி யார் துரும்பாம்
கனமிலகு சோலைவளர் சேலசுக மரச்சார்ந்த
கற்பக விராச மேவும்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 19

இவரித்தன்மையரெனல்

அரியநூன் பிரபந்த முதறியாக் கேளாத
வசடனே கனசெவிடனு
மாங்கார மதுகொண்டு பெரியோரை மதியாத
வறிவிலா தவனுமையாம்
பெரிதாந் தலங்கண்டு சென்றுதுதி செய்யாத
பேர்களே சப்பாணியாம்
பிசகாம லநுதினமு மின்பதந் தரியாப்
பெருமூட னதிகுருடனாம்
தருமஞ்செய் வாரைத் தடுத்திடும் பேர்கொடிய
சண்டாள மாபாவியாம்
தாரணியி லிவர்தம்மை யெனிந்த வண்ணமே
தப்பாமலே வகுப்பான்
கரிதனை யுரித்துமுய லகனையு மிதித்தவா
கற்பக விராச மேவும்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 20

இப்பத்திரஞ் செல்லாதெனல்

சகமதின் முப்பதாண் டுக்குமேற் பட்டதைச்
சாதன மெனும்பத்திரம்
தந்திட்ட தொருமுதற் பொருளுக்கு வட்டியது
சமமாகு மளவுமனவுக்

தகவுறுந் திறமுடைய னாகியே தனிகன்மிகு
தனமிலகு செல்வ னாகிச்
சமீபத் திருந்துவாழ் கின்றகட னாளியைச்
சற்றெனுங் கோளாமலுந்
துகளிலாச் சீட்டினைக் காட்டாம லுமவன்
சும்மா விருந்து விடிலோ
தோன்றுமப் பத்திர நீதித் தலத்தினிற்
றோல்வியுற் றழியுமெனவே
ககனத்தார் துதிமுனிவ ரகமுற் றுரைத்தனர்கள்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே.
கயிலையங் கிரிவா சனே 21

இது செல்லுமெனல்

மூன்னோர்கள் சொன்னதோர் புத்தியுண ராதமுழு
மூடனெதிர் வருவ தறியா
மூர்க்கங்கொ ளுன்மத்த னாரைவிட் டோடினோன்
மூதுரை வழாது காக்கு
மன்னவர்க் குத்தன்னு ளஞ்சினோ னிளமைபெறு
வாலிபன் யாதாயினும்
வருத்திடுந் திறமிலா தவன்மிகு பயத்தினால்
வருந்திடப் பட்ட வனிவ
ரின்னிலந் தனிலெவ ரிடத்தாயி னும்பொரு
ளேற்றெழுதி யீந்த பத்ர
மெக்காலு நெடுநாள தாயினுஞ் செல்லுமென
வேயிசைத் திடுவர் முனிவோர்
கன்னல்வில் லியைமுன்ன மின்னுலடை யச்செய்த
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 22

குருவி னியல்பு

சீலமுயர் தீக்ஷையும் பாசவயி ராக்யமுஞ்
    சிவபத்தி மிகவு முளராய்த்
திகழ்கின்ற வேதாந்த நாதாந்த யோகாந்த
    சித்தாந்த நெறி புணர்ந்து
பாலதா யெகாது வேதமறு சாத்திரம்
    பதினெண்பு ராணமுடனே
பகர்கின்ற வறுபத்து நாற்கலைக் கியானமும்
    பயனறிந் தநுபோக ராய்
மேலதா யெவாறு தலமுங் கடந்துபாழ்
    வெளிகண்டு வீர சைவ
விதிமுறை வழாதுமெய்ஞ் ஞானவழி காட்டுவோர்
    மேலான சற்கு ரவராங்
காலனை யுதைத்துமார்க் கண்டனைக் காத்தவா
    கற்பக விராச மேவுங்
கன்னைபுரி யீசனே மங்கைபங்கி னேசனே
    கயிலையங் கிரிவா சனே. 23

வைத்திய வியல்பு

நாடிகணி தானமும் மெண்வித பரீட்சையொடு
    நாடிப் பிணிக் குறிகளும்
நவசித்தர் கோரக்கர் கும்பமுனி தன்வந்திரி
    களினும் வாகடமு மோர்ந்து
சாடிவரு மூலிகையொ டறுபத்து நான்காஞ்
    சரக்குவகை முறைதெ ரிந்து
தயிலங்கள் பஸ்பங்கள் கிருதங்கள் குளிகையொடு
    சகல வவுடத முறைகளு
நீடியொ ருவேத மோதிவைக சாதியு
    நிகண்டுபணி ரண்டு மோர்ந்த
நிலையுளோர் தங்களைப் பண்டிதர்க ளென்பரிந்
    நீணிலந் தனிலா னைக்

காடதனை வென்றசிவ யோகியர் நிதம்பரவு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 24

### வியாதிவரு மூலம்

மயிரினா லுமியினாற் கடுவழி நடக்கையால்
மலசல மடக்கை யாலும்
மனதுதுய ரத்தினாற் கல்லினா னெல்லினால்
மாதர்கள் புணர்ச்சி யாலுந்
தயிரிரவி லுண்ணலாற் கனிபல வருந்தலாற்
சருகூற னீரி னாலும்
தயிலமது மூழ்கிமட மங்கையொடு சேர்தலாற்
றண்பனியி னாற்கா லையில்
வெயில்காய்த லாற்கண் விழித்தலால் மிக்குணவு
மேவலால் வெகுநித்ரையால்
விளம்பிடும் பத்தியத் தாழ்வினால் வினையினால்
வியாதிவரு மூலமென்பார்
கயிரவந் தனைவென்ற செவ்விதழ் மடந்தைசூழ்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 25

### இலட்சுமி இருப்பிடம்

கொற்றவ ரிடத்தினுங் கோக்களின் வாலினுங்
குணவான்கள் வதனத் தினுங்
குடத்தினுறு பாலினுங் கடல்வார ணத்தினுங்
கொடியினுந் துரகத் தினுஞ்
சுற்றநீங் காதமனை தன்னினுங் கற்புமிகு
தோகைய ரிடந்தன் னினுஞ்
சொல்லரிய சிவிகைபே ரிகைதனங் களினுமது
சூதனன் றிருமார் பினுஞ்

சற்குருவினும் வாய்மை தவறு மிடத்தினுஞ்
சலத்தினொடு நாளி யத்தனுஞ்
சாதிமல ரதனினும் புண்ணிய ரிடத்தினுந்
தங்கநவ ரத்தி னத்தினும்
கற்றவ ரிடத்தினுந் திருமக ளிருப்பிடங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 26

மூதேவி யிருப்பிடம்

வருகின்ற யாசக ரிடத்துநோ யினருளும்
வாளின்மட மங்கை யாளும்
வன்கூகை முகமதிற் றீபத்தி னிழலினும்
மட்குழை யின்பு கையினும்
குருதிமட வானிழ லாடுதாட் புகையினுங்
கொட்டிடு முறத்தா னினும்
குருவாச னிழல்வினாத் தாணிமர நிழலினுங்
குலைக்குநாய்க் காற்றா னினும்
பெருகுதனை தன்னைப் பெருக்கிடுந் தூளினும்
பிணமயா னப்புகையினும்
பிறலாங் கன்றையிறு பதிகபோசன ரினும்
பேசுபொய் யினரி டத்துங்
கருதரிய மூத்தா ளிருக்குமிட மிவையென்பர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 27

கலிகால வியல்பு

தாலமர மிழலினக் கோரமுத முண்டினுந்
தப்பாது குடிய ரென்பர்
தனமிருத் துணைப்பர்கள் பித்தனை பணிக்கிடித்
தங்கமென் றேமொழி குவார்

வாலிபந் தன்னிலே யதிசில ராகவே
வைகினும் விடனென் பர்காண்
வறுமைசே ரெளியர்கள் வயிரமது பூண்கினும்
வளையற்க லெனவு ரைப்பார்
சிலம் புறத்தினு மகத்தினக் கிரமமும்
செயுமீன ரைப்பு கழுவார்
சித்தசுத் திபதாகி ஞானநெறி தேர்ந்திடுந்
திவ்யபெரி யோரை யிகழ்வார்
காலகலி யுகதரும மீதென வுரைத்திடுவர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 28

இதற்கிது நன்றெனல்

ஈயாத லோபியைப் பன்முறை கெஞ்சுவதி
லேற்றுண்ப தேநன் றதா
மிடர்தரு வியாதியாற் றேகமிக மெலிவதி
லிறந்திடுவ தேநன்ற தாந்
தாய்தந் தைகளுவக் காப்பிள்ளை பலரினுஞ்
சற்புத்ர னொருவ னன்றாந்
தன்மனைவி யாட்கஞ்சி இல்வாழ்க்கை செய்வதிற்
சந்யாச மிக்க நன்றாம்
ஓயாது நிலையிலாச் சொற்பல வுரைப்பதினு
முறுதிமொழி யொன்று நன்று
முதவாத லோபர்மேற் கவிசொலித் திரிவதினு
முன்னடி துதிப்ப னன்றாங்
காயத்ரி மந்த்ரமற வாதவே தியர்துதிசெய்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 29

## கர்வத்தாற் பங்கமுற்றோர்

பிரமனது கருவமும் மாரன் புகழ்ச்சியும்
    பிடுபெறு வாலி யகமும்
பேசிலங் கைக்கரச னற்றலு மிராட்சசப்
    பெண்டாடகைச் சமர்த்துந்
திரிபுரர்க ளெண்ணமுந் தக்கனது வேள்வியுந்
    தீக்குருபரி தரிய வினைவுஞ்
சினங்கொள்கயி டவன்மதந் தொரோண பத்மன்
    செருக்குமிரு விரர் வலியு
மிரணியன் பிடிமான மும்பகா சூரன
    தியம்பொணா வுயிர் பறிப்பு
மின்னும் பராக்கிரம மிருந்தபுர வலர்மதமு
    மிறவாது நிலைநின் றதோ
கரியமால் தேடியுங் காணாத பாதனே
    கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே 30
    கயிலையங் கிரிவாசனே.

## * கடனியா விடம்

வாத்தியார் கவிவாணர் வறுமையர்க டனகுரு
    மறையோர்கள் மந்திரவாதி
மாதர்பொது மங்கையர்கள் பண்டிதர்க ளஞ்சாத
    மாவீர ரடிமை யானோர் [த
சாத்திரஞ்சொல்பவர்கள் கருணிகர்கள் பிரசாண்
    தபசிசந் யாசி நட்டான்
சவரகன் கூத்தாடி வேசிகாந் தன்பந்து
    தாயாதி யிவர்கட் கெளரம்
பூத்தனச் செல்வர்கட னீந்திடின் மீண்டுமப்
    பொருள் வந்தருது கேட்கிற் [மாய்
பொல்லாங்க தாய்ப்பிறுங் கைப்பொருள் சேத
    போகுமென வேயு ரைப்பார்

காத்தருள்செய் கர்த்தனே நீத்தவ ரகத்தனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 31

## பயனிலாதவை

கற்பிலா மங்கையர்க் கெழுசுற் றராணும்வெங்
காவலு மிருந்து மென்ன
காஞ்சிரங் கனியதைத் தேன்குடந் தன்னில்வெகு
காலம திருத்தி யென்ன
வற்புதம தாகவே யரியகவி தைகளெலா
மற்பர்மு னுரைத்து மென்ன
வசாத்யநோ யாளருக் கமுதசிந் தாமணி
யரைத்துப் புகட்டி லென்ன
நற்புவியி லேபிறந் தொருசுகிர்த மும்பெறு
நரரிருந் தாவ தென்ன
ஞானநெறி யின்றியே கோடிநூ லோதினும்
நயப்பென்ன லதுபோ லவாங்
கற்பனைய முறுவலார் பொற்புயர் நடஞ்செய்திடு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 32

## இவர்பகை யாகாதெனல்

அற்றூர் தமைத்தாங்கு வேந்தருப தேசிக
ரமைச்சர்மிகு பொருள் படைத்தோ
ரரியமந் திரவாதி கபடர்நய வஞ்சக
ரதிதுட்ட ரொடுகோ ளர்கள்
கற்றுய்ந்த பாவாணர் பிறர்கல்வர விடுதூதர்
கள்ளமரர் புரிகூ ரர்கள்
கருணிகர் வயித்தியர் தவத்தினி லுயர்ந்துமெய்க்
காட்சிதரு சிவயோ கியர்

சத்ருவினு மிக்கவி ரெண்மரொடு பகை
தான்கொளிற் றன்ப முனைதாஞ்
சர்வசன மும்கொல்ல வந்தகொடு விடமுண்ட
தற்பரா சிற்சொ ரூபா
கற்றோர் குழாமேய்க்க வுற்றோர் தினம்பரவு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 33

## இருந்தும் பயனில்லாதவை

இரவலர்க் குதவாத நிதிமதியி லாவான
மிசைபொருளில்லாத பாடல்
யிரக்கமில் லாமனம் வணக்கமில் லாமதலை
யேந்திழையி லாவில் வாழ்க்கை
புரவியில் லாதபடை சதுர்மறையி லாவேள்வி
புஷ்பமில் லாத சோலை
புத்திரரி லாதமனை மந்திரியி லாவரசு
புகழ்படைக் காத வுடலர்
திரவிய மிலாவிளமை கவிஞரில் லாதசபை
செங்கோ லிலாத நாடு
இயானையில் லாதசெப நதிகளில் லாதவூர்
வீரமில் லாத சேனை
கரங்க ளிலாததநு கண்ணிலாச் சித்ரமாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 34

## கர்வி யாவோர்

தனையே புகழ்ந்துபிறர் யாரையு மிகழ்ந்திடுஞ்
சண்டியோர் தனக்கெ ருவியாஞ்
சத்திரங் காதெருது போற்றலைமை யாட்டிடு
சழக்கனோர் மதக்கெ ருவியாம்

வினையங்க ளொடுபெரியர் செய்நூ லழிக்கின்ற
விகடனோர் தமிழ்க்கெ ருவியாம்
வேசியர்க ளாசையால் மனைவியை வெறுப்பவன்
வெறுமமதை சேர்கெ ருவியா
மனைவோரு மறியவே மதுவுண்டு திரிபவ
னங்கார மிககெ ருவிய
மட்டதிசை யாள்பவன் துட்டத் தனஞ்செயி
லதிகார கெருவி யென்பார்
கனமானகிருபைவைத் தெனையாண்ட முதல்வனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலைபங் கிரிவா சனே. 35

பட்டணச் சிறப்பு

பக்கமொரு நாற்காத நீளஞ் சவுக்கமாய்ப்
பலர்கணிறை தருமா வணம்
பணிவாவி மாடமாளிகை மேடை கோபுரம்
பகரால யங்க ளுடனே
மிக்கரத கஜதுரக மொடுபதா திகளினொடு
வேசையர்க ளாடல் பாடல்
வீதியிரு பாலினுந் தாழைகமு கஞ்சோலை
மேவுமொளி சூழு மணிக
டக்கபுக ழந்தணர்கள் மன்னர்மந் திரிமுதற்
சகலஜா தியரு முளதாச்
சற்சனரொ டட்டலட் சுமிவாச முள்ளதே
சதிர்பெறும் பட்டணம தாங்
கைக்குளே நெல்லியங் கனியெனக் காட்சிதரு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 36

### குணமாறாதெனல்

வேதமந் திரமோதித் தேன்பால் புகட்டினும்
  வேம்பது கரும் பாகுமோ
வெண்மைதரு பனிச் சொரிந்து பயிர்செய்யினும்
  வெள்ளுள்ளி குணமாறுமோ
தோகையர் முலைப்பா லூட்டி வளர்த்திடினு மந்தி
  கொடிய சேட்டையை நீக்குமோ
குணமாத்திரை லேகியம் பலபல வளிக்கினுங்
  குக்கலின் வானி மிருமோ
சாதிமலர் மாலைபோ னெட்டியிற் செய்திடிற்
  சற்றேனும் வாச முறுமோ
சற்குண மிலாதவர்க் கெத்தனை யுரைக்கினுஞ்
  சண்டிக் குணம்போகுமோ
காதலொடு மாரனை யணைக்கைய னுரையருள்
  கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
  கயிலையங் கிரிவா சனே. 37

### கருமிகளாவோர்

மனிதனென வுருவுகொண் டெனதுதிரு வடியினை
  வணங்கிடா னொரு கருமியாம்
மனைவிசுத ரிலையவே வேசியே கதியென்று
  வைகுவோ னொரு கருமியாம்
தனமிக விருக்கவுண் ணாதுடுக் காதமெய்
  தளருவோ னொரு கருமியாம்
சந்யாசி யாகியும் பெண்ணாசை விட்டிடாச்
  சண்டாள னொரு கருமியாம்
மனவாத ஞானநூ லோதியா ணவமதை
  யகற்றிடா னொரு கருமியா
மன்னைதந் தையர்கள் பசிநோய்கொண் டலைந்திட
  வருந்தவோ னொரு கருமியாம்

கனகசபை தன்னிலே நடனமிடு பாதனே
கற்பகவிராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 38

## கருடதரிசன பலன்

ஆதிவாரந் தனிற் கருடனைத் தரிசிக்கி
லரியபிணி யாவு மகலு
மழகுபெறு திங்கள்மங் களவார முந்தொழ
வகத்திலுறு துயர்க ளும்போம்
நீதிதரு புந்தியுங் குருவார முந்தொழ
நெடியகு னியமு மகலும்
நிறைவெள்ளி சனிவார மிரவிசா யுங்காலை
தேடியே தரிசித் திடின்
மேதையொடு தனகனக வாகனாதி கண்முதன்
மேன்மைபெறு செல்வ முளவாம்
வேந்தரென வாழ்ந்துதம திருகண் களிக்கமுடி
விற்பரம பதமடைகு வார்
காதலுடனே பணிசெ யன்பருக் கருளுதவு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 39

## பதினெண் புராணம்

மதிக்கின்ற பௌடிகங் காந்தமார்க் கண்டேயம்
வாமனங் கூர்மம் லிங்க
மன்னுமுயர் பிரமாண்டம் வாராக மச்சமிவை
மங்கைபா கன்பு ராணந்
துதிக்கின்ற பாகவதம் வைணவங் காருடந்
தோன்று நாரத மாலதாஞ்
சொல்லரிய பிரமமொடு பதுமம் மிரண்டுமால்
சுதனயற் குரிய வென்பார்

விதிக்கின்ற பிரமனை வர்த்தயா நித்தற்கு
மேவுமக் கினித்தனக் கோர்
வெற்றிசே ரக்னியை மாமியி சொன்பதென்
மிக்கோ ருரைப்பர் கண்டாய்
கதிக்கின்ற தொண்டரு ளுதிக்கின்ற சோதியே
கற்பக விராச மேவுங்
கங்கைபுரி யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 40

உன்னூரிற் சிறப்படையாதார்

உன்னூரில் வேசையர் பணிக்கருப தேசிக
ருபாத்தியா ரண பேர்க
ளுயர்தவம் புரிகுரவர் மறுதேச மன்னவர்க
ளோரங்குவா நியர் தூதர்கள்
தென்னுதமிழ் கவிவாணர் கூத்தாடி கோணங்கி
செப்படிக் கற்ற பேர்க
டிறமான வாணர்கள் சோதிடர் வயித்தியர்கள்
சிலதொழில் கற்ற னோர்க
ளுள்ளபடி யிரெட்டு பேர்களையு மெள்ளளவு
முன்னூரி லாறதி கொள்ளா
ருண்மையாய்க் கன்னுண்ப ராகிலும் புதியர்தமை
புலகெல்லாங் கொண்டாடு வார்
கன்னகலி யுகமதி னடக்கை யிதுவாகுமே
கற்பக விராச மேவுங்
கங்கைபுரி யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 41

இராக முப்பத்திரண்டாவன

மண்டலம் புகழ்தே சாரங்கி ஸ்ரீகவுள
மங்கலஞ் சௌராஷ் டகம்
மலஹரி குறிஞ்சியுஞ் சங்கரா பரணமும்
வராளி யுஞ் சுருட்டி

குண்டநாற் கிரியையோ டுதயரீ லாம்புரி
கோவிந்த ரளித நாட்டை
குணகவுளி கேதார கல்யாணி காந்தாரி
கோகிலா மேக ரஞ்சி
பண்டர் துதி சாரளி காம்போதி தன்னின்
மூன்றாக நாத கிரியை
பழகான பைரவி முகாரியுந் தோடியோ
டரியநவ ரோசி விசயங்
கண்டமெழு ராகங்கண் முப்பத்திரண் டதாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 42

வாத்தியங்க ளாவன

தாளவாத் தியமோடு திறமான மத்தளஞ்
சரமண்ட லந்தாரை யுஞ்
சகமெலா மோசையெழு கின்றபே ரிகையுலகு
சாற்றுசர மணி வாத்யமும்
நீளவாத் தியமதாங் கின்னரியி னெடுமுரசு
நேர்ந்த தவளச் சங்குமு
நேரான கொம்போசை பூரிதம் பட்டமிந்
நீணில மெலா மொலிக்கு
மேளவாத் தியமும்வெகு விதமான நாகசுரம்
வெற்றிதரு தம்பூ ருடன்
வேடிக்கை யானதோர் டங்காவு டுக்கையும்
விநோதமிகு மெக்காள முங்
காளவாத் தியமுமெந் நாளினு முழங்கிடுங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 43

## தொண்ணூற்றாறு தத்துவம்

பூதங்க ளைந்ததாம் ஞானவிந் திரியமாம்
பொறியைந்து புலனைந் ததாம்
பொல்லாத தொழில்கரும விந்திரிய மைந்ததாம்
புகழ்பெறுங் கரண நாலாக்
தாதுவேழ் குணமூன்று மலமுமோ ரைந்ததாம்
சாற்றிடு விகார மாறுந்
தழைத்திடும் வாயுவொரு பானென்பா மண்டலந்
தானுமொரு மூன்ற தாகு
மாதார மாறுகும் வாசல்களு மொன்பதா
மவத்தை யைந்தாகு மிக்க
வருமைசேர் துயர்நாடி பத்ததாங் கோசமைந்
தாம்பிணியு மூன்ற தாகும்
காதல்செய் கருவிமிது தொண்ணூற்றொ டாறென்
கற்பக விராச மேவும் [பர்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 44

## இதுவரையிற் கலியாண்டவரசர்

ஆதிப் பரிட்சித் ததன்று ஜனமேஜய
னுண்டதவு மூன் றாறதா
மடவா னரேந்திர னென்றுகுறை மூன்று
றவன்புதல்வ னெண்பத் தொன்று
நீதிபெறு விக்கிரம னீராயி ரஞ்சாலி
கிறைமூன்று நூற்றைம் பதா
மதிபோஜ னைம்பதெண் டிக்கமொடு நூறுற
நிகரில் பிரதாப ருத்ரன்
சாதிமனு சோழனீரு நூற்றொடிரு பத்தியெண்
டசம்ராயர் மூவைம் பதாஞ்
சமர்புரி துலுக்கரைஞ் நூற்றியே ழைந்ததாஞ்
சாற்றுபரி தாபி முதலாக்

காதிகலி யுகமதிற் கும்பினிய ராசுகாண்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 45

தோத்திரம்

சுக்கில சுரோணிதந் துன்னியுரு வாயதிற்
றேனரம் பெலும்பு மாகித்
தொல்லைமல பாண்டத்தி லீரைந்து திங்கள்
துவண்டு கருவூர் கடந்து
யொக்கலைவைம் பூதங்கள் கொட்டைகொண்டே மா
யுலகினி லுதித்து மதிபோ [யை
லோங்கியெழி னூலோதி நாரியிடை மயன்மீதி
யுட்கவலை சமுசா ரமா
மிக்கடலின் மூழ்கிவலை சிக்குமா னென்னவே
மிடறுழன் றதுபோ துமே
இப்பிறப் பதுநீக்கி மரணுந்த காலமு
னெழுந்தருளி யென்ற னுடைய
கக்கிஷமெ லாந்தவிர்த் துனதுபதமே யருள்செய்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 46

இதுவுமது

அஞ்சுதே நெஞ்சமுங் கிஞ்சிதம தாகிலு
மடங்கியருள் பெறவு மில்லே
னடவிமலை குகைதனிற் சருகிலை யருந்தியே
யருந்தவ மியற்றியு மிலேன்
பஞ்சவிந் திரியம டக்கிலே னுன்றிருப்
பணிவிடை புரிந்து மில்லேன்
பத்தியுட னஞ்செழுத் தோதுகில் லேனருட்
பரமனே யானுன் பதங்

தஞ்சமென நம்பினே னேழைபங் காளனே
தர்மவர்த் தனிபங் கனே
சருவசன ரட்சகா வெனதுசஞ் சலமெலாந்
தவிர்த்தருள்வ துனது கடனே
கஞ்சன்மா லிந்திரன் தேவர்முனி வோர்தொழுங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 47

சுகமகிழ்ச்சி

துதிவாணி திருவருளும் விசயநல் லாடையுந்
துன்னிவறிவு சௌபாக் யமுஞ்
சுகமான போகமுந் தனதான்ய லாபமுஞ்
சொல்லரிய மைந்தர் வளமு
மதிபெருகு கல்வியொடு ஞானமுந் தர்மமு
மகத்தான பேர்க ளுறவும்
வண்மைமிகு கீர்த்தியு மிராப்பகன் மகிழ்ச்சியும்
வயதுசம் பூர்ண முறு
மதிககந் தரமான தர்மவர்த் தனியுமைய
மையநீ யிருவ ருந்தா
னடைவதற் கரியவில் லைக்கான்கு வகையுமிவ்
வடியனேற் கருள்புரிகு விர்
கதிர்மதி யுடன்றேவர் கின்னரர்கள் தருவர்குழ்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 48

கற்புடைப்பெண்டி ரியல்பு

தங்கணா யகரினிற் றெய்வம்வே றில்லையெனச்
சந்தத நினைந்தவர் சொலைத்
தட்டாது கோபம்வர வொட்டாது நினைவர்க்
சாற்றுபணி விடைகள் செய்தே
பொங்கமா யவர்குதிப் போர்க்கொழுதி கித்தனும்
போர்த்தபெரி யோர்க் கருந்திப்

புரிந்தவ ருளங்களித் திடவிருந் தாற்றியிரு
போது நன்னீ ராடியே
திங்கள்வத னத்திலே கஞ்சுபொட் டிட்டுமெய்த்
தேசுற வலங் கரித்து
தினமூகா யகனுண்ட பின்னுண்டு முன்னெழுஞ்
செல்விகற் புடைய ளாவார்
கங்கணத் திரிசூல மான்மழு தரித்தவா
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 49

வேசைய ரியல்பு

புருடனைக் கண்டவுட னேகதவி டுக்கினிற்
போயொளித் திடுவர் பின்பு
பொல்லாத தாய்க்கிழவி தன்னையவர் பாலினிற்
போக்கிவச னிக்க விடுவார்
மருடருங் கண்ணினர் சற்றருகி லேவந்து
மயல்விளைத் துறவு செய்வார்
மன்னனின் னடிகளிச் சிறுகுடி லில் வைத்ததெம்
மாதவ மெனச் சொல்லுவ
ருணிறைந் தவர்போல விருகையி னற்றழுவி
யாவலொடு முத்த மிடுவர்
ஐயநீ பிரியிலெம தயிர்பிரியு மென்றவர்க
ளாவிமுழு தும் பறிப்பார்
கருமைமணிவேசியர்கண் முறைமையிதுகாணென்
கற்பக விராச மேவுங் [பர்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 50

வருடமறுபதுக்குமாதம்பிறக்கும்நாள்

ஆதியிற் சித்திரை மாதம் பிறக்குநா
ளன்றைத் தினங் கார்த்திகை
யானமார் கழியுறு நாளினி லுதித்திடு
முதிகன்னி மூன்றி லாகு

சித்திரை யாடியும் வைகாசி யாவணிலா
    திகழ்த்து மைப்பசி யாதிலாம்
தைமாசி யைந்திலா மானியா வணியுட
    சேர்ந்த பங்குனி யேழிலா
மாதமுங் காண்குமுன் சொன்னவா ரங்களில்
    வழுவாம லேயுதிக்கும்
வருடங்க ளறுபதினு மாதம் பிறக்கின்ற
    வாரங்க ளிவ்விதம தாம்
காதர கத்திலெய் தாதொரு பிரமமே
    கற்பக விநாச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
    கயிலையங் கிரிவா சனே. 51

வருடமறுபதுக்கும் வார நட்சத்திரத்
திதி நாழிகை பிறப்பு

முன்வருட முதயமான் பின்வருட மறுதின
    முளைத்திடும் வருடங்க டான்
மூன்றுநட் சத்திரம் பதினொன்றி னுதயமா
    முறைவருட நட்சத் திரம்
பின்திதி பிறந்திடு மீராறு தன்னிற்
    பிறக்கின்ற வருட மாகும்
பிறந்தமுன் னாழிகை செட்டின்மேற் றோன்றிடும்
    பிசகாமல் வகை விபரமாய்
வன்னமயில் வாமலே வருட நட்சத்திரம்
    வாரங்க டிதிக ளுடனே
வளர்நாழி கைத்தொகையு மிவ்விதம தாமென
    வழுத்தினர் தெளிந்த நாவோர்
சன்மவினை யொழியவே நன்மையரு ளையனே
    சற்பக விநாச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
    கயிலையங் கிரிவா சனே. 52

கலியுகமுஞ் சாலிவாகன சகாப்தத் தொகையும்
பிரித்திடு மறுபதை யெண்பத் திரண்டினிற்
பெருக்கிக் கணக் காக்கவே
பேர்பரா பவமுத னடக்கின்ற வருடவரை
பிசகாது தொகை யானதி
லுரைத்தபனி ரெண்டுங் கழித்திடக் கலியாண்டு
ளோங்கிய சகாப்த வகைகே
ளுள்ளபடி யறுபது மிருபதோ டொன்பானு
மொட்டிப் பெருக்கியே தான்
விரித்தபிர பவமுத னடக்கும் வருடம்வரை
விடாதுதொகை கூட்டி யதனில்
விளம்புபதி னொன்றுங் கழித்திட சகாப்தமதின்
விபரமிது வென்பர் மேலோர்
கரத்தினின் மான்மழு தரித்திடுங் கடவுளே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே. 53

மாதம் 12-க்கும் நட்சத்திர மறிவது

கனமான சித்திரைத் திங்கள்நட் சத்திரங்
கண்டதே யொன்ற தாகும்
கருதரிய ரிஷபத்தி லேந்தானி யொன்பதாங்
கடகமோர் பதின் மூன்றதாந்
துனிசிங்க மஃதுபதி னேழ்கன்னி மூவேழ
தாந்துலா மூவெட்ட தாந்
தொடுகார்த்தி யிருபதேழ் மார்கழியிரண் டதாஞ்
சொன்மகர நாலா குமே
செனிகும்ப மாறதா மீனமஃ தொன்பதாஞ்
சித்திரைத் திங்கண் முதலாந்
திகழ்கின்ற மாதங்கள் பனிரெண்டு மிவ்விதஞ்
சேர்ந்துவரு நட்சத் திரங்

கனகசபை நாதனே யெனதுகலி நீக்கியருள்
    கற்பக விராச மேவுங்
கங்கைபுரீ சேனே மங்கையமிழ் நேசனே
    கயிலையங் கிரிவா சனே. 54

